DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **STC.No.264/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : திரு.அருண்குமார் (சிறப்பு சார்பு ஆய்வாளர் ) (P.w.5)
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of March 2026

( எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை :-**

1. நான் திருச்சுழி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.03.2025ம் தேதியன்று 9.30 மணிக்கு திருச்சுழி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது திருச்சுழி தாலுகா, தி.பச்சேரி கிராமத்தைச் சேர்ந்த முத்துமாரி மனைவி இந்துராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று, புகாரின் தன்மைகேற்ப மேற்படி நிலைய குற்ற எண்.98/2025 பிரிவுகள் 296(b), 115(2) BNS-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தபட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். (**அந்த புகார்மனு அ.சா.ஆ.3 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. பின்னர் அன்றைய தினமே 19.30மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கணேசன், பாலமுருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). பின்னர் சம்பவ சாட்சிகள் வாதி இந்துராணி, ராமநாதன், பூமிநாதன், ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து பிரிவு 180(3)–ன்படி வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்னர் நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து, தக்க இருநபர் ஜாமீன்தார்கள் மூலம் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து 07.04.2025ம் தேதியன்று எதிரி மீது பிரிவுகள் 296(b), 115(2) BNS–ன் கீழும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எ.த.கு.வி**

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்மனு பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சரியான புலன் விசாரணை மேற்கொள்ளாமல், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் புகார்தாரர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக தவறான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன். என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.